**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.230/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | பிரசாந்த் |
| Father's Name/Husband Name: | ராமலிங்கம் |
| Village : | நூத்தப்பூர் |
| Taluk : | வேபந்தட்டை |
| Age : | 29/ 2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபடுகிறார்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரித்த போது கூறிய சங்கதிகளைத் தான் நீதிமன்றத்தில் எனது முதல் நிலை சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். கருப்பையா, தங்கவேல், ராமலிங்கம், எதிரி சீனி இவர்கள் அனைவரும் அ.சா.2 ஆன எனது அப்பாவின் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எங்களுக்குள் நூத்தப்பூரில் உள்ள வயல்காடு ஆளுக்கு ஒன்றரை ஏக்கர் என பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். அந்த நிலத்தில் மின் இணைப்பு எனது பெரியப்பா கருப்பையா பெயரில் இருந்தது என்றால் எனது தாத்தா பெயரில் இருந்தது அவர் இறந்த பிறகு வீட்டில் கருப்பையா மூத்தவர் என்பதாலும் கருப்பையா பாகத்தில் கிணறு மற்றும் மின் இணைப்பு இருந்ததாலும் அவரின் பெயரில் மாறி விட்டது ஆனால் நான்கு பெயருக்கும் பொதுவானது தான் அது. சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் உருட்டுக் கட்டையில் நீளம் மற்றும் தடிமன் குறித்து போலிசார் விசாரணையில்

சொல்லி உள்ளேனா என்றால் உருட்டுக் கட்டையால் அடித்தார்கள் என்று மட்டும் தான் சொன்னேன் நீளம் மற்றும் தடிமன் குறித்துச் சொல்லவில்லை. உருட்டுக் கட்டையை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடக்கும் பொழுது ஊரில் 20–25 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அவர்களிடம் போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் எனக்கு தெரியாது. சாட்சிகளாகிய விஜய், சரசு, கருப்பையா, கார்த்திக் இவர்கள் எங்கள் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்களா என்றால் விஜய், சரசு மட்டும் தான் எங்கள் தெருவை சார்ந்தவர்கள். கருப்பையா மற்றும் கார்த்திக் ஆகியவர்கள் எங்கள் வீட்டில் வேலை செய்ய கொத்தனார் அழைத்து வந்தார் அவர்கள் வெளியூரை சேர்ந்தவர்கள். சம்பவம் நடந்ததும் 108 ஆம்புலன்ஸில் நான் மட்டும் தான் சென்றேனா என்றால் சரியல்ல. நானும் எனது தங்கை ரம்யாவும் எனது அம்மாவை ஆம்புலன்ஸில் அழைத்துச் சென்றோம். மருத்துவமனையில் போலிசார் எனது அம்மாவிடம் வாக்குமூலம் பெறும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. போலிசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சரியாக நியாபகமில்லை. எத்தனை போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்கு நியாபகமில்லை. எதிரிகளுக்கும் எங்களுக்கும் மின் இணைப்பு காரணமாக முன் விரோதம் இருந்து வருவதால் அவர்களுக்கு எதிராக எனது அம்மா கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1. சித்ரா , அ.சா.2. ராமலிங்கம் மற்றும் ப.சா.4. ரம்யா ஆகியவர்கள் எனது குடும்பத்தினர் என்றால் சரிதான் நான் சொல்வது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd./-xxxxxxx
Judicial Magistrate
Additional Mahila Court,
Perambalur.